A/L 86
PAPER CLASS
ஆரம்பம்
11 - 01 - 86
சனி பி. ப. 12-30 மணி
விபரங்களுக்கு;-
New Master Institute
BMC Lane, Jaffna.



Registered as a Newspaper

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை ரூ-1/=



Physics - திரு. வர்ணம்
Chemistry - திரு. தில்லைநாதன்
Botany - திரு. குகாதரன்
Zoology - திரு. நாகநாதன்
Pure / Applied ]-Maths -திரு. நல்லையா
New Master Institute
BMC Lane, Jaffna.



சுடர்:- 1 யாழ்ப்பாணம் குரோதன ஆண்டு மார்கழி மீ 25 உ வியாழக்கிழமை ஹிஜ்ரி 1406 ரபி. ஆகிர் பிறை 27 (09-01-1986) UTHAYAN —A LIVELY TAMIL DAILY கதிர்:-44


# பொங்கலோடு அடகு நகை கைக்கு வரும்

## ரூ. 50 கோடி பெறுமதியானவை; பலாலியில் வைத்து விநியோகம்

—அலுவலகச் செய்தியாளர்: வனிதராஜன்—

யாழ்ப்பாணம், ஜன. 9

வடபகுதியில் உள்ள மக்கள் வங்கிக் கிளைகளில் அடகு வைக்கப்பட்டுள்ள நகைகள் பொங்கலோடு உரிமையாளர்களுக்குத் திருப்பி வழங்கப்படவுள்ளன.

50 கோடி ரூபா மதிப்புள்ள சுமார் 80,000 பார்சல் நகைகளைத் திருப்பி ஒப்படைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மக்கள் வங்கியின் வடபிராந்திய முகாமையாளர் திரு. முத்துத்தம்பி கணேசசுந்தரம் எடுத்திருக்கிறார்.

பலாலி ஆயுதப்படை முகாமுக்கு அருகிலுள்ள ஒரு தனியார் கட்டடத்தில் வைத்து இந்த நகைகள் நாளாந்தம் 150 பேருக்குத் திருப்பி வழங்கப்படும். விடுமுறைத் தினங்களிலும் வழங்கப்படும்.

ஜனவரி 3ஆம் திகதி, பிராந்திய முகாமையாளர் திரு. கணேசசுந்தரம் கண்காணிப்புக்குழு ஊடாக மக்கள் வங்கி உயர் அதிகாரிகளுடனும் யாழ். மாவட்ட அமைச்சர் திரு. யு. பி. விஜேகூனுடனும் இதுசம்பந்தமாகப் பேச்சுக்கள் நடத்தினர்.

நகைகளை அடகு வைத்தவர்கள் படும் கஷ்டங்கள் பற்றியும் திரு. கணேசசுந்தரம் இவர்களிடம் விவரித்துச் சொன்னார்.

அதன் பின்னர்தான் நகைகளைத்திருப்பிவழங்க மக்கள் வங்கிப் பொது முகாமையாளர் திரு. பி. பி. இரத்னயக்கா எழுத்துமூலமான உத்தரவை வடபிராந்திய முகாமையாளரிடம் கொடுத்தார். கொழும்பில் உள்ள நகைகள் அனைத்தும் பலாலி முகாமுக்கு எந்தநேரமும் கொண்டு வரப்படலாம். அதற்கான ஏற்பாடுகள் வங்கி உயர் அதிகாரிகளினால் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

முன்னர் நகைகளை யாழ் கோட்டை முகாமுக்குக் கொண்டுவருவது பற்றி ஆலோசிக்கப்பட்டது.

பாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டு நகைகளைக் கோட்டையில்வைத்திருப்பதற்கு பாதுகாப்பு அமைச்சு அனுமதி மறுத்துவிட்டது.

பலாலி முகாமுக்குஅருகில் உள்ள கட்டடம் ஒன்றில் வைத்து நகைகள் பொங்கலுக்குப் பின்னர் வழங்கப்படும். சனி

(4-ம் பக்கம் பார்க்க)

சங்கானை மக்கள் வங்கியில்

## கொள்ளைபோன நகை; நஷ்டஈடு யாழ்நகரில்

யாழ்ப்பாணம், ஜன. 9

மக்கள் வங்கிச் சங்கானைக் கிளையில் கொள்ளை இடப்பட்ட நகைகளுக்கான நட்ட ஈடு, அவற்றின் உரிமையாளர்களுக்கு பொங்கலுக்குப் பின்னர் வழங்கப்பட உள்ளது.

கோட்டை முகாம் அருகில் வங்கிக்கிளையில் வைத்து இப்பணம் வழங்கப்பட உள்ளதாக மக்கள் வங்கியின் வடபிராந்திய முகாமையாளர் திரு. முத்துத்தம்பி கணேசசுந்தரம் உதயன் செய்தியாளரிடம் சொன்னார்.

15 கோடி ரூபா நகைகள் சங்கானை வங்கிக் கிளையில் இருந்து கொள்ளையிடப்பட்டன.

இதற்கான நட்ட ஈட்டுப்பணம் கொழும்பில் வைத்து வழங்கப்படுவதாக முன்னர் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

கொழும்பு சென்று பணத்தைப் பெற மக்கள் படும் கஷ்டங்கள் பற்றி பிராந்திய முகாமையாளர் திரு. கணேசசுந்தரம் எடுத்துச் சொன்னதைத் தொடர்ந்து, யாழ்ப்பாணத்தில் வைத்தே நட்ட ஈட்டை வழங்கும்படி பொது முகாமையாளர் உத்தரவு இட்டார்.

பொதுமுகாமையாளரின் உத்தரவு நேற்றுத்தான் பிராந்திய முகாமையாளருக்குக் கிடைத்தது.

# தொண்டாவுக்கு பயம்! பயம்!!

## இலங்கை அரசு பற்றிக் கருத்துத் தெரிவிக்க

புதுடில்லி, ஜன. 8

மலையகத் தமிழர் பிரச்சினை பற்றி இலங்கை அரசு என்ன செய்யும் என்பது பற்றிக் கருத்துத் தெரிவிக்க எனக்குப் பயமாக உள்ளது.

அமைச்சர் திரு. தொண்டமான் புதுடில்லியில் வைத்து செய்தியாளர்கள் மத்தியில், மேற்கண்டவாறு சொன்னார்.

பிரதமர் ராஜீவ் காந்தியுடன் விமானப் பிரயாணத்தில் பேச்சுக்கள் நடத்திய பின்னர்தான் இந்திய வெளிவிவகார அமைச்சு கொள்கை வகுப்புக் குழுத் தலைவர் திரு ஜி பார்த்தசாரதி, வெளியுறவுச் செயலாளர் திரு. ரொமேஷ் பண்டாரி ஆகியோரைச் சந்தித்தார் அமைச்சர் திரு. தொண்டமான்.

அதன் பின்னரே, "இலங்கை அரசு என்ன செய்யும் என்பது குறித்து கருத்து வெளியிட எனக்குப் பயமாக இருக்

(4-ம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் பெருமழை

### பல இடங்கள் வெள்ளத்தில்

மட்டக்களப்பு, ஜன. 9

கிழக்கில் தொடர்ந்து பெருமழை பெய்து வருகிறது. பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியிருக்கின்றன.

அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களே பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்றன.

மட்டக்களப்பில் மன்னம்பிட்டி,கல்எல, வெலிகந்த பகுதிகளில் 8 அடி வெள்ளம் பாய்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மன்னம்பிட்டி பாதையில் சில வாகனங்கள் வெள்ளத்தில் புரண்டு போயிருக்கின்றன.

(4ஆம் பக்கம் பார்க்க)

## மரங்களுக்கு மரணதண்டனை!

யாழ்ப்பாணம், ஜன. 9

யாழ்ப்பாண நகரில் உள்ள பெரிய மரங்களுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு மரணதண்டனை விதித்திருப்பவர்கள் பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள்.

மரணதண்டனையை நிறைவேற்றும் பொறுப்பு உள்ளூராட்சி அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

என்ன திகைக்கிறீர்கள்? யாழ்நகரில் உள்ள நூலக வீதி, புல்லுக்குளம் வீதி, கே. கே. எஸ். – தபால்நிலைய வீதி, பண்ணை வீதி ஆகிய நான்கு வீதிகளிலும் உள்ள உயர்ந்து பரந்திருக்கும் மரங்களை குறிப்பிட்ட காலத்திற்குள் வெட்டிவிட வேண்டும் என பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் யாழ் மாநகரசபைக்கு உத்தரவிட்டிருப்பதாக அறியவந்துள்ளது.

மரங்களைத் தறிக்கத் தவறின் அதனால் ஏற்படும் பாதிப்புகளுக்கு உள்ளூராட்சி அமைச்சே பொறுப்பேற்க வேண்டும் எனவும் அந்த உத்தரவில் தெரிவிக்கப்பட்டிருக்கிறதாம்.

மேற்கு பெர்லினில்

## அரசியல் தஞ்சம்; இலங்கையரே முன்னணி

மேற்கு பெர்லின், ஜன 8

1985 ஆம் ஆண்டு மேற்கு பெர்லினில், அரசியல் தஞ்சம் கோரி விண்ணப்பித்த சுமார் 23,000 பேரில் இலங்கைத் தமிழர்தான் முதலிடம் பெறுகின்றனர்.

கடந்த சனிக்கிழமை (4-1-86) மேற்கு பெர்லின் உள்துறை அமைச்சர் செனட்டர் ஹின்ரிச் லும்மர் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

இலங்கையில் இருந்து 4,784 பேரும்—

ஈரானில் இருந்து 3.250 பேரும்—

லெபனானில் இருந்து 3,209 பேரும்—

கானாவில் இருந்து 2,037 பேரும்—

இந்தியாவில் இருந்து 1,780 பேரும்—

அரசியல் காரணங்களைக் காட்டி மேற்கு பெர்லினில் தஞ்சம் கோரியுள்ளனர்.

மலையகத் தமிழருக்கு குடியுரிமை:

# ராஜீவின் நிலையை தமிழகம் வரவேற்கிறது

## ஆளுநர் அறிவிப்பு

சென்னை, ஜன. 8

இலங்கைத் தமிழ் அகதிகள், இந்தியக் குடியுரிமை பெற்ற மலையகத் தமிழர்கள் குறித்து பிரதமர் ராஜீவ் காந்தி எடுத்துள்ள புதிய நிலையை தமிழ்நாடு அரசும் வரவேற்றுள்ளது.

தமிழ்நாடு சட்டசபை மேல்சபை கூட்டத் தொடரைத் தொடக்கி வைத்துப் பேசுகையில் ஆளுநர் திரு. எஸ்.எல். குரானா, தமிழக அரசின் இந்த விருப்பத்தைத் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழ் அகதிகள் பத்திரமாகவும் கண்ணியமாகவும் இலங்கை திரும்பும் சூழ்நிலை ஏற்படும் வரை, இந்தியக் குடியுரிமை பெற்றவர்களை இந்தியா திருப்பி எடுக்காது என்று இந்தியப் பிரதமர் அறிவித்து இருந்தது தெரிந்ததே.

ஆளுநர் தனது உரையில், தமிழக அரசு இந்தியப் பிரதமரின் நிலையை வரவேற்றுள்ளது என்று குறிப்பிட்டார்.

இலங்கைப் பிரச்சினையை விரைவில் தீர்த்து வைக்கும்படி இந்திய அரசை தமிழ்நாடு அரசு வற்புறுத்துகின்றது என்றும் ஆளுநர் தனது உரையில் சொன்னார்.

## மண்சரிவு மரணம் 38 ஆக உயர்வு

### பல இடங்களில் அபாயம்

கொழும்பு, ஜன. 9

மலையகத்தில் மண்சரிவினால் இறந்தவர்கள் தொகை 38 ஆக உயர்ந்தது.

நேற்றும் மண் சரிவினால் 17 பேர் உயிரிழந்தார்கள். மேலும் பலரைக் காணவில்லை.

நேற்று முன் தினம், மண்சரிவில அகப்பட்ட 21 பேர் உயிரிழந்தது தெரிந்ததே.

மலையகத்தில் தொடர்ந்து பெய்து வரும் மழையினால் மேலும் பல இடங்களில் நேறறு மண்சரிவு ஏற்பட்டது.

பதுளையில் நேற்று 11 பேர் மண்ணிநகுப் பலியானார்கள். வலப்பனை, மத்துறட்ட பகுதியில் நேற்று தொடர்ந்து ஏற்பட்ட மண்சரிவில் மேலும் ஆறு பேர் உயிரிழந்தார்கள்.

நேற்று முன் தினம் இதே இடத்தில் மண்சரிவினால் 13 பேர் மரணமானது தெரிந்ததே.

இதேவேளை மலையகத்தில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதனால் மேலும பல இடங்களில் மணசரிவு ஏற்படலாம் என அஞ்சப்படுகிறது.

## ★ நீலன் லலித் பேச்சு

கொழும்பு, ஜன. 9

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மாற்று யோசனைகள் குறித்து இலங்கை அரசு, கூட்டணியின் கொழும்புப் பிரமுகரான முன்னாள் எம். பி. டாக்டர் நீலன் திருச்செல்வத்துடன் தொடர்பு கொண்டு உள்ளது.

இலங்கை அரசின் சார்பில் தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலிதான் டாக்டர் நீலன் திருச்செல்வத்துடன் விரிவான பேச்சுக்களை நடத்தியுள்ளதாகத் தெரிகின்றது.

முச்சந்திமுரளி



ஓம், ஓம், யாழ்ப்பாணத்திலை றோட்டாலை போற ஆக்களுக்கே கோட்டையிலையிருந்து மரண தண்டனை விதிக்கயிக்கை, உந்த மரங்கள் என்ன ஒருபொருட்டே அவைக்கு!

# தமிழ் பகுதியில் பாகிஸ்தான் விமானிகள்

## துப்பாக்கி ஹெலிக்கொப்டர்களை செலுத்துவதாகக் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 9

தமிழ்ப் பகுதிகளில் துப்பாக்கி பொருத்தப்பட்ட ஹெலிக்கொப்டர்களைச் செலுத்துவதற்கு பாகிஸ்தான் விமானிகள் அமர்த்தப்பட்டுள்ளனர்.

இவ்வாறு அரசாங்கத்தின் மீது குற்றம் சுமத்தியுள்ளார் கூட்டணிச் செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கம்.

கொழும்பில் இருந்து வெளிவரும் ஆங்கிலத் தினசரிக்கு அமெரிக்காவில் வைத்து அளித்த பேட்டியிலேயே திரு. அமிர்தலிங்கம் இவ்வாறு குற்றம் சாட்டியிருக்கிறார்.

பாகிஸ்தான் விமானிகள் தமிழ்க் கிராமங்களுக்கு மேல் துப்பாக்கி பொருத்தப்பட்ட ஹெலிக்கொப்டர்களை எப்பொழுது, எந்நேரம் செலுத்தினர்கள் என்பது பற்றி தகவல்கள் என்னிடம் இல்லை.

ஆனால் மிகவும் நம்பக்கூடிய வட்டாரங்களில் இருந்துதான் இத்தகவல்கள் எனக்குக் கிடைத்தன.

அந்த வட்டாரங்களை நான் வெளியிட முடியாது.

தமிழ்ப் போராளிகளின் போராட்டத்தை அடக்க இலங்கைக்கு உதவப் போவதாக பாகிஸ்தான் ஜனாதிபதி இலங்கையில் வைத்து அறிவித்தது, இலங்கை இனப் பிரச்சினையில் இருந்து இந்தியாவைத் தந்திரமாக அகற்ற எடுக்கும் முயற்சியாக இருக்கும் போல் தெரிகின்றது.

பாகிஸ்தான் இலங்கைக்கு ஆயுதங்களை வழங்குகின்றது இலங்கை வீரர்களுக்கு பாகிஸ்தான் பயிற்சி அளிக்கின்றது. தனது விமானிகளையும் பாகிஸ்தான் இப்பொழுது அனுப்பியுள்ளது.

டாக்காவில் நடந்த தென்கிழக்கு ஆசிய பிராந்தியக் கூட்டமைப்பு மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவு, தமிழ் விடுதலைப் போராட்டத்துக்கு எதிராகப் பாவிக்கப்பட இந்தியா அனுமதிக்காது என்று நான் கருதுகின்றேன்.

சர்வதேசச் சட்டத்தின்படி அயல்நாடு ஒன்றில் மனித உரிமைகள் மீறல்கள் பரவலாக இடம் பெறுகையில் அவற்றைத் தடுக்க இராணுவ ரீதியில் தலையிட இந்தியாவுக்கு உரிமை உண்டு.

இந்தியா மிகவும் உறு

(4-ம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

09 - 01 - 1986

வியாழக்கிழமை

சுபநேரம்

8.02 முதல் 9-32 வரை

ராகு காலம்

2 02 முதல் 3-32 வரை

இவை இரவுக்கும் பகலுக்கும் பொருந்தும்

இலங்கையின்

# தேயிலைக்கு தடை விதிப்பு

## ஆஸ்திரேலிய நிறுவனம்

கொழும்பு, ஜன 9

ஆஸ்திரேலியாவில் உள்ள தேயிலை இறக்குமதி நிறுவனம் ஒன்று, இலங்கையில் இருந்து தேயிலை இறக்குமதி செய்வதைக் காலவரையின்றி இடை நிறுத்தியுள்ளது.

ஆஸ்திரேலியாவின் "புசல்ஸ்" நிறுவனமே இலங்கை தேயிலை இறக்குமதியை இடை நிறுத்தியது.

இந்த நிறுவனம் கடந்த ஆண்டில் இலங்கையிலிருந்து 30 லட்சத்து 80 ஆயிரம் கிலோ தேயிலையை இறக்குமதி செய்திருந்தது.

ஆஸ்திரேலியா தனது தேயிலைப் பாவனையில் அரைவாசியை இலங்கையில் இருந்துதான் இறக்குமதி செய்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இந்த விடயம் தொடர்பாக நாளை (வெள்ளிக்கிழமை) கொழும்பில் ஒரு மாநாட்டை அவசரம் அவசரமாக தோட்டத் தொழிற்துறை அமைச்சு

(4-ம் பக்கம் பார்க்க)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## தேன்நிலவை நினைத்து பார்க்கின்றார் ஸ்ரீதர்

பிரபல இயக்குநர் ஸ்ரீதர் பல வெற்றிப் படங்களை தமிழ்த் திரையுலகுக்கு அளித்தவர்.

ஏற்கனவே திரையுலகில் புகழ் பெற்றிருந்த ஸ்ரீதர், "தேன் நிலவு" படம் மூலம் விறு நடை போடத் தொடங்கினார்.

தமது "தேன் நிலவு' பட அனுபவத்தைப் பற்றிக் குறிப்பிடுகையில் அவர் சொன்னார்:

"சி. வி. ராஜேந்திரன், பி. என். சுந்தரம் போன்ற துடிப்புள்ள இளைஞர்களைப் பங்குதாரர்களாகச் சேர்த்து சித்ராலயா என்ற கம்பனியைத் தொடங்கினோம்.

முழுக்க முழுக்க காஷ்மீரிலேயே படமாக்கும் நோக்கத்தோடு "தேன் நிலவு"க்கு கதை, வசனம் எழுதினேன்.

திட்டமிட்டபடி ஜெமினி, வைஜயந்திமாலா ஜோடியாக நடிக்க ஒப்பந்தமானார்கள்.

எங்கள் யூனிட்டைச் சேர்ந்த ஐம்பது பேர்களையும், அவரவர் குடும்பத்தோடு காஷ்மீருக்கு அழைத்துச் சென்றோம்.

எங்கள் சித்ராலயா கலைத் தோணி காஷ்மீர் கவர்ச்சிமிக்க ஏரியில் உல்லாசப் பயணம் செய்தது.

நாற்பத்தைந்து நாட்களில் "தேன் நிலவு" படத்தில் காஷ்மீரின் கண்கொள்ளா அழகு பரிபூரணமாகப் பொலிவு பெறும் வகையில் நட்சத்திர நடிகர்களை ஆடியும், பாடியும் நடிக்க வைத்துப் படமாக்கினோம்.

கண்ணுக்கும் கருத்துக்கும் குளுமையான காதல் காவியமாக உருவான "தேன் நிலவு" திரையுலக வரலாற்றில் புதுமையாகது என்று போற்றப்பட்டது.

சித்ராலயாவின் அசாத்தியமான சாதனை என்று எல்லோரும் பாராட்டினார்கள்" என்றார்.

## செனட்டர் காரிஹார்ட் பதவியிலிருந்து ஓய்வு

நியூயோர்க், ஜன. 8

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயகக் கட்சி வேட்பாளராகப் போட்டியிடுவதற்காக திரு. காரி ஹார்ட், செனட்டர் பதவியில் இருந்து ஓய்வு பெற முன் வந்துள்ளார்.

செனட்டராக இருந்து கொண்டு, ஜனாதிபதித் தேர்தலில் முழுமூச்சாகப் போட்டியிட முடியாது என்று திரு. காரி ஹார்ட் கருதுவதே இதற்குக் காரணம்.

1988 இல் இடம்பெற உள்ள ஜனாதிபதி தேர்தலில் ஜனநாயகக் கட்சி வேட்பாளராக திரு எட்வர்ட் கென்னடி போட்டியிடவில்லை.

எனவே, ஜனநாயகக் கட்சி வேட்பாளராக வருவதற்கு திரு. ஹார்ட்டுக்கே அதிக சந்தர்ப்பம் இருப்பதாகக் கருதப்படுகின்றது.

லிபியாவுடன்

# வர்த்தக, நிதி தொடர்புகள் துண்டிக்கப்பட வேண்டும்

## அமெரிக்க நிறுவனங்களுக்கு ஜனாதிபதி றேகன் உத்தரவு

வாஷிங்டன், ஜன. 8

லிபியாவுக்கெதிராக நிதி, வர்த்தகத் தொடர்புகளைத் துண்டித்துக் கொள்ள வேண்டுமென அமெரிக்க நிதி, வர்த்தக நிறுவனங்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி றேகன் வெள்ளை மாளிகையில் நடத்திய ஆலோசனையைத் தொடர்ந்து இந்த உத்தரவில் கையெழுத்திட்டுள்ளார்.

அமெரிக்காவுக்கும் லிபியாவுக்குமான பொருளாதார தொடர்புகள் அனைத்தையும் கூடிய அளவுக்கு இந்த உத்தரவு நிறுத்தி விடுமென நம்பப்படுகிறது.

லிபியாவுடனான ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகத் தொடர்புகளையும் இது முற்றிலும் தடை செய்து விடும்.

அனைத்து அமெரிக்க நிறுவனங்கள் மட்டுமல்ல அமெரிக்க குடிமக்களும் லிபியாவுடன் வர்த்தகம் மேற்கொள்வதை நிறுத்தி விடவேண்டுமெனவும் உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கொண்டு லிபியாவில் தங்கியிருந்து வர்த்தக நடவடிக்கைகளில் அமெரிக்கர்கள் ஈடுபடக் கூடாது. மீறுபவர்களுக்கெதிராக குற்ற வழக்கு தாக்கல் செய்யப்படும். இவ்வாறு அந்த உத்தரவு மேலும் எச்சரிக்கை செய்வதாக தெரிவிக்கப்படுகிறது.

உத்தரவு கையெழுத்தானதையடுத்து பத்திரிகையாளர் மத்தியில் றேகன் கருத்துத் தெரிவிக்கையில்;

லிபியாவிலுள்ள அனைத்து அமெரிக்கர்களும் அந் நாட்டைவிட்டுவெளியேறிவிடவேண்டும்.

லிபியாவில் இப்பொழுது இருக்கும் அமெரிக்கர்களுக்கு ஊறு நேரும் பட்சத்தில் லிபியாவே இதற்குப் பொறுப்பெனவே அமெரிக்க அரசு கருதும் எனத் தெரிவித்தார்.

லிபியாவில் கேர்ணல் கடாபியைத் தனிமைப்படுத்துவதற்கு ஒத்துழைக்குமாறு ஐரோப்பிய நாடுகளுக்கும் அழைப்பு விடுத்துள்ளார் றேகன்.

கனடா, நெதர்லாந்து ஆகிய நாடுகள் அமெரிக்க அழைப்பை நிராகரித்து விட்டன.

பிரான்ஸ், மேற்கு ஜேர்மனி, பெல்ஜியம், ஜப்பான் ஆகிய நாடுகள் அமெரிக்கா தனது செயல் திட்ட விவரங்களை வெளியிட்ட பின்னரே தமது நிலையை அறிவிக்கப் போவதாய் கூறியுள்ளன.

45 இஸ்லாமிய நாடுகள் கலந்து கொண்ட மொறக்கோ மாநாடு அமெரிக்காவின் நடவடிக்கைகளுக்கு எதிராக லிபியாவுக்கு உதவி வழங்கப்போவதாக அறிவித்துள்ளது.

அரபு லீக் கூட்ட அமர்வின் இறுதியிலும், லிபியாவுக்கு ஆதரவு வழங்குவதாகத் தீர்மானிக்கப்பட்டது.

லிபியாவைத் தனிமைப்படுத்த எடுக்கும் அமெரிக்க முயற்சிகளையும் இராணுவ நடவடிக்கைத் திட்டங்களையும் இந்த நாடுகள் கடுமையாகக் கண்டித்துள்ளன.

## வெளி உலகில்

லிபியாவுக்கெதிராக

## அமெரிக்கா, இஸ்ரவேல் அச்சுறுத்தல்

### அரபு லீக் கண்டனம்

ரியூனிஸ், ஜன. 7

லிபியாவுக்கெதிராக இராணுவ நடவடிக்கை என்ற போர்வையில் அமெரிக்காவும் இஸ்ரவேலும் மேற்கொள்ளும் அச்சுறுத்தலை 'அரபு லீக்' இயக்கம் கண்டித்துள்ளது.

21 அரபு நாடுகளைக் கொண்ட இந்த அமைப்பின் விசேட கூட்ட அமர்வு இருதினங்களுக்கு முன்னர் முடிவடைந்தது.

இந்த மாநாட்டின் இறுதிக் கட்டத்தில் லிபியா தோன்றி தனது நிலையை விளக்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்க, இஸ்ரவேல் அச்சுறுத்தல் பற்றி அரபு லீக் மேலும் கருத்து வெளியிட்டது.

இந்த அச்சுறுத்தல் மிகப் பயங்கரமான ஒன்று முழு அரபுலகத்துக்கும் எதிரான சவாலை இது பிரதிநிதித்துவப்படுத்துகிறது. இவ்வாறு லீக் தனது ஆத்திரத்தை வெளியிட்டுள்ளது.

கூட்ட அமர்வின் முடிவில் வெளியிடப்பட்ட அறிக்கை வாபஸ் வாங்கப்பட்டது. சிறு மாற்றங்கள் செய்யப்பட வேண்டி இருப்பதாகவும் அதன்பின் இது வெளியிடப்படும் என மேலும் தெரிவிக்கப்பட்டது.

ரியூனிஸ் நகரில் இருந்து இயங்கும் அரபு லீக் தனது முழு ஆதரவையும் லிபியாவுக்கு வழங்குவதெனவும் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

அமெரிக்க இஸ்ரவேல் துருப்புகள் லிபியாவுக்கெதிராக நகர்த்தப்பட்டால் பாரதூரமான விளைவுகள் ஏற்படும். இவ்வாறுஅந்த மாநாட்டு முடிவில் எச்சரிக்கை விடப்பட்டது.

### அமெரிக்க தூதுவர் ராஜினாமா

லண்டன், ஜன. 8

லிபியாவுக்கான அமெரிக்கத் தூதுவர் திரு. நிக்கலஸ் ஹெலியொட்டி தனது பதவியை ராஜினாமாச் செய்துவிட்டார்.

## கிளிநொச்சியை சேர்ந்த 10 பேர்விடுதலை
### பிரஜைகள் குழு முயற்சியால்

கிளிநொச்சி, ஜன. 9

கிளிநொச்சி பிரஜைகள் குழுவின் வேண்டுகோளுக்கிணங்கிய கிளிநொச்சி இராணுவத்தினர் விசாரணைகளை துரிதப்படுத்தியதால் கடந்த 4ஆம் 5ஆம் திகதிகளில் பத்துப்பேர் விடுதலை செய்யப்பட்டனர்.

கிளிநொச்சி, ஆனையிறவு, கோட்டை முகாம்களில் விசாரணைக்காக இராணுவத்தால் தடுத்து வைக்கப்பட்டு கடந்த 4ஆம் 5ஆம் திகதிகளில் விடுதலை செய்யப்பட்டோர் விபரம் பின்வருமாறு:-

பசுபதிப்பிள்ளை - ரவீந்திரன் (உருத்திரபுரம்) முருகேசு விமலநாதன் (உருத்திரபுரம்), கணபதிப்பிள்ளை - குணரத்தினம் (உருத்திரபுரம்). கந்தையா - யோகராசா (உருத்திரபுரம்) ஏழுமலை விக்கினேஸ்வரன் (கனகபுரம்) இராசையா - லோகநாதன் (பாரதிபுரம்) சின்னையா தங்கவேலு (பாரதிபுரம்) சங்கரப்பிள்ளை - சிவலடியான் (உருத்திரபுரம்) கணபதிப்பிள்ளை - பேரின்பநாதன்.

### மக்களை பாதுகாக்க வேண்டுகோள்

திருநெல்வேலி, ஜன. 9

பாதுகாப்புப் படையினர் யாழ் கோட்டையிலிருந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்துவருவதால் அப்பாவிப் பொதுமக்கள் பலியாகியும், காயமடைந்தும் வருகிறார்கள்.

இதை உடன் நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்து பொதுமக்களை பாதுகாக்க வேண்டும்.

மண்டைதீவு பிரஜைகள் குழுச் செயலாளர் மேற்கண்டவாறு தந்தி மூலம் யாழ் அரசாங்க அதிபரைக் கேட்டுள்ளார்.

## தர்மபுரம் பகுதியில் நடந்த நேரடி மோதல்

விசுவமடு, ஜன. 9

லொறி ஒன்றில் சென்று கொண்டிருந்த ஆயுதப் படையினருக்கும் இளைஞர்கோஷ்டி ஒன்றுக்கும் இடையே ஏற்பட்ட நேரடி மோதலில் இரு பகுதியினருக்கும் காயம் ஏற்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது.

கடந்த வாரம் இச்சம்பவம் நடந்தது.

லொறி ஒன்றில் சுமார் பதினைந்து இராணுவவீரர்கள் தருமபுரம் பகுதிக்கு வந்த போது இளைஞர் கோஷ்டி ஒன்றின் வாகனத்தைக் கண்டனராம். உடனே இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

இளைஞர் கோஷ்டியும் எதிர்த்தாக்குதல் நடத்தியது இருபகுதியினருக்கும் இடையே சுமார் பதினைந்து நிமிடம் கடும்சமர் நடந்தது.

அதிகாலை வீதியில் வெற்றுத் தோட்டாக்கள் பல காணப்பட்டன. இரத்தக்கறையும் காணப்பட்டது.

### ரயில் டிக்கெட்
## விளையாட்டரங்கில இல்லை; ரயில் நிலையத்தில் பெறலாம்

யாழ்ப்பாணம், ஜன. 9

காசுக்கட்டளைகளுக்குத்தான் யாழ். ரயில் நிலையத்திலும் பயண டிக்கெட் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது

விளையாட்டரங்கில் வைத்து பணம் கொடுத்து பயண டிக்கெட்டுகள் பெறும்முறை சென்ற சனிக்கிழமை இடம் பெற்ற அசம்பாவிதத்துடன் நிறுத்தப்பட்டுவிட்டது.

இதன் காரணமாக மாற்று ஒழுங்குகள் செய்யப்படும்வரை, காசுக் கட்டளை கொண்டு வருவோருக்கு யாழ் ரயில் நிலையத்தில் வைத்து பயண டிக்கெட்டுகள் வழங்கப்படும் என்று ரயில் அதிகாரிகள் அறிவித்தனர்.

பணத்துக்கு பயண டிக்கெட்டுகள் வழங்கப்படமாட்டா.

இதனிடையில், மக்கள் வங்கியின் முகாம் கிளைக்கு அருகில் உள்ள ஒரு இடத்தில் வைத்து பணத்துக்கு பயண டிக்கெட்டுகள் வழங்குவதற்கு ரயில் அதிகாரிகள் முயற்சி செய்து வருகின்றனர்.

காசுக்கட்டளை எடுப்பதற்கு உதவியாக கட்டண விவரங்கள் கீழே தரப்படுகின்றன;

**யாழ்தேவி**

யாழ்—மருதானை :

மூன்றாம் வகுப்பு — 59ரூபா 30 சதம்

இரண்டாம் வகுப்பு — 161 ரூபா 30 சதம்

யாழ்—வவனியா 18 ரூபா 50 சதம்

**இன்டர் சிற்றி**

யாழ்—மருதானை 150 ரூபா

### யாழ் மாவட்ட இணைப்பு அதிகாரி

யாழ்ப்பாணம், ஜன. 9

பிரிகேடியர் எச். எஸ். ரூபசிங்கா செவ்வாய் முதல் யாழ் மாவட்ட இணைப்பு அதிகாரியாக பதவியேற்றார் ஏற்கனவே இணைப்பு அதிகாரியாகப் பணியாற்றி வந்த பிரிகேடியர் ஹமில்டன்வனசிங்க மாற்றம் பெற்றுச் சென்றது தெரிந்ததே.

## மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

# ஆயுதப்படையினரின் செயல் கண்டனத்துக்குரியது

### மனித உரிமைகளுக்கான வெகுஜன இயக்கம் அறிக்கை

யாழ்ப்பாணம், ஜன 9

கடந்த சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் யாழ்ப்பாணத்தில் ஆயுதப்படையினர் நடத்திய துப்பாக்கி. பீரங்கித் தாக்குதல் கண்டிக்கப்படவேண்டியது.

இத்தகைய நடவடிக்கைகளை மனித உயிர்களை அற்பத்தனமாக மதித்து நடக்கும் செயல் என்றே கூறவேண்டும். இந்த தாக்குதல்களை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

இப்படிக் கண்டனம் தெரிவித்திருக்கிறது மனித உரிமைகளுக்கான வெகுஜன இயக்கம்.

இது தொடர்பாக இயக்கத்தின் செயலாளர் திரு. சோ. தேவராஜா அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கிறார்.

அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

சனி, ஞாயிறு நடைபெற்ற துப்பாக்கி,பீரங்கி தாககுதல்களினால் 11 பேர் கொல்லப்பட்டனர். 85 பேர் வரை காயமடைந்தனர்.

யுத்தநிறுத்த அத்துமீறல்களைப் பற்றி விசாரணை செய்ய கண்காணிப்புகுழு யாழ்ப்பாணம் வந்திருந்த வேளையில் அவர்கள் முன்னிலையில் இத்தாக்குதல்கள் நடைபெற்றிருக்கின்றன.

நகரத்திற்கு அன்றாட அலுவல்களைக் கவனிப்பதற்கு சென்ற அப்பாவி பொதுமக்கள்தான் இந்த சம்பவத்தில் அநியாயமாக கொல்லப்பட்டார்கள்; படுகாயமடைந்தார்கள்.

கோட்டைக்குள்ளிருந்து ஏவப்பட்ட பீரங்கிக் குண்டுகளும்,ஹெலிக்கொப்டர் துப்பாக்கிக் குண்டுகளும் நகரின சன நடமாட்டம் உள்ள பகுதிகளில் வீழ்ந்துள்ளன,

இப்படியான சம்பவங்கள் மேலும் தொடராதவாறு நடவடிக்கை எடுக்க வேண்டும்; தமிழ் மக்களின் நடமாடும் சுதந்திரத்தை உறுதி செய்ய வேண்டும்.

இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

### லியோ கழகம இரத்ததான இயக்கம்

யாழ்ப்பாணம், ஜன. 9

யாழ் மத்திய கல்லூரி லியோ கழகம செவ்வாயன்று யாழ் மத்திய கல்லூரியில் இரத்த தான இயக்கம் ஒன்றை ஏற்பாடு செய்தது.

30 க்கு மேற்பட்ட மாணவர்கள் இரத்த தானம் செய்தனர்.

தொடர்ந்து இரத்த தான இயக்கங்களை நடத்தவும் லியோ கழகம் ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

## தந்தை தற்கொலை செய்த பின் பிள்ளைகளின் எலும்புக் கூடு கிணற்றில் கண்டுபிடிப்பு!

### திருமலையில் புதுக்கதை

—திருமலை மாவட்ட செய்தியாளர் —

திருகோணமலை, ஜன. 9

மனைவியுடன் கோபித்துக் கொண்டு தனது ஒரே மகனையும் ஒரே மகளையும் கிணற்றினுள் தள்ளி கொலை செய்தார் 38 வயது இளைஞர் ஒருவர்.

பத்து தினங்கள் கழித்து அவர் தாமும் ரயில் முன் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டார்.

தற்கொலை செய்து கொண்ட பின்னர் அவரின் சட்டைப் பையினுள் இருந்து கண்டெடுக்கப்பட்ட கடிதம் ஒன்றில் இருந்தே மகனையும் மகளையும் பத்துத் தினங்களுக்கு முன்னர் கொலை செய்த சம்பவம் வெளியானது.

கடிதத்தில் குறிப்பிட்டபடி துவரங்காடு என்னுமிடத்தில் உள்ள கிணறு ஒன்றைப் பொலீஸார் சோதனை இட்டனர்.

அந்தக் கிணற்றினுள் இருந்து இரண்டு எலும்புக்கூடுகள் மட்டுமே அவர்களால் மீட்கப்பட்டன.

இரண்டு குழந்தைகளின் எலும்புக் கூடுகள் என்று அவை பின்னர் அடையாளங் காணப்பட்டன.

தந்தையான நடராசா யோகநாதனின் மரணம் தற்கொலை என்று திடீர் மரண விசாரணை அதிகாரி ஜனாப் அலிஅக்பர் தீர்ப்பளித்தார்.

இரண்டு குழந்தைகளின் மரணங்களும் கொலைச் சம்பவம் என்று பதில் நீதிவான் திரு வ. இ சச்சிதானந்தம் தீர்ப்பளித்தார்.

தற்கொலை செய்து கொண்ட தந்தை, திருமலை, அன்புவழிபுரத்தில் வசித்து வந்தார்.

அவரின் 30 வயதான மனைவி வெளிநாடு ஒன்றில் வேலை செய்து விட்டு ஒன்றரை மாதங்களுக்கு முன்னர்தான் நாடு திரும்பினார்.

அதன் பின்னர் ஏற்பட்ட குடும்பத் தகராறு தான் இப்படுபாதகச் செயலில் முடிந்தது.

மனைவிக்கும் இறந்த கணவன் ஒரு கடிதத்தை எழுதி வைத்து இருந்தார்.

''உண்மையாக அன்பு வைத்திருந்தால் நீயும் இறந்து விடு'' என்று கணவன், மனைவிக்கு அக் கடிதத்தில் எழுதியிருந்தார்.

## ஓய்வூதிய கொடுப்பனவு கோட்டை காரியாலயத்தில்

யாழ்ப்பாணம், ஜன. 9

இலங்கைவங்கி, கச்சேரிக்கிளை ஆகியவற்றில் ஓய்வூதியம் பெற்று வந்தவர்கள் ஜனவரி மாதத்துக்குரிய ஓய்வூதியத்தை கோட்டை கொடுப்பனவு காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

ஜனவரி 11 ஆம் திகதி சனிக்கிழமை சிவில் ஓய்வூதியம் பெறுவோருக்கு ஓய்வூதியம் வழங்கப்படும்.

விதவைகள், அனாதைகள், ஆசிரியர், ஆசிரிய விதவைகள், படைக்கல சேவிதர்கள், படைக்கல சேவிதர்களின் விதவைகள் ஆகியோருக்கான ஓய்வூதியம் 12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வழங்கப்படும்.

இக் கொடுப்பனவுகள் யாவும் காலை 9 00மணி முதல் பிற்பகல் 1.00 மணிவரை வழங்கப்படும்.

### ஓய்வூதியம் வழங்கும் திகதிகள்

யாழ்ப்பாணம், ஜன. 9

1986 ஆம் ஆண்டின் சகல மாதங்களுக்கும் உரிய ஓய்வூதியக் கொடுப்பனவுகள் பின்வரும் திகதிகளில் வழங்கப்படவுள்ளன.

| | |
|---|---|
| ஜனவரி | 9 ஆம் திகதி |
| பெப்ரவரி | 13 ஆம் திகதி |
| மார்ச் | 13 ஆம் திகதி |
| ஏப்ரல் | 9 ஆம் திகதி |
| மே | 15 ஆம் திகதி |
| ஜூன் | 12 ஆம் திகதி |
| ஜூலை | 15 ஆம் திகதி |
| ஆகஸ்ட் | 14 ஆம் திகதி |
| செப்டம்பர் | 11 ஆம் திகதி |
| அக்டோபர் | 15ஆம் திகதி |
| நவம்பர் | 13 ஆம் திகதி |
| டிசம்பர் | 11 ஆம் திகதி |

## காந்தி படம் நஷ்டம்!

கொழும்பு, ஜன.9

"காந்தி" ஆங்கிலச் சினிமாப் படம் வெளியிடப்பட்டதன் மூலம் இலங்கை திரைப்படக் கூட்டுத்தாபனத்துக்கு 6 லட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டது.

இவ்வாறுகாணி,காணி அபிவிருத்தி, மகாவலி அபிவிருத்தி அமைச்சர் திரு. காமினி திஸாநாயக்கா நாடாளுமன்றத்தில் கூறினார்.

திரைப்படக் கலைஞர் நம்பிக்கை நிதியம் சம்பந்தமான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் இதைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது:-

"காந்தி" திரைப்படம் இங்குமட்டுமல்ல, இந்தியாவிலும்கூட நஷ்டம் கண்டது.

ஆனால் மேல்நாடுகளில் பிரஸ்தாபபடம் அமோக வெற்றியையும் வரவேற்பையும் பெற்றதுடன், பெரும் வசூலையும் பெற்றது.

இவ்வாறு அவர் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### உதய சங்கற்பம்

ஒவ்வொன்றும் மனத்தைப் பொறுத்தது. மனத் தூய்மை இன்றி ஒரு காரியத்தையும் சாதிக்க இயலாது.

--அன்னை சாரதாதேவி.

உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

இல: 15, 2வது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 24805, 22073

09-01 86 த. பெ. 28

## அம்மையார் உயர அருமையான சந்தர்ப்பம்

ஆறு வருடங்களாகக் குடியுரிமை இழந்திருந்த சிறிமா அம்மையாருக்கு இப்போது தான் அது மீண்டும் கிடைத்தது.

உடனேயே அவர் பொதுத்தேர்தலை நடத்துவிக்க வேண்டும் என்று ஆலாய் பறக்கிறார். இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண வேண்டும் என்று அவர் கூறியது நியாய சிந்தை ஆனால் பொதுத் தேர்தல் நடத்துவதன் மூலம்தான் தமிழர் பிரச்சினையைத் தீர்க்கலாம் என்று சொல்வது அவரின் சுய நல உள்ளம். இது அரசியல் வாதிகளுக்கு இருக்கும் வழக்கமான நெஞ்சம் தான்.

பொதுத்தேர்தலில் தமிழர் பிரச்சினையை வைத்துப் பந்து விளையாடுவது தமிழருக்கு ஆபத்தானது. அது அனுபவம். தமிழர்களின் நியாயமான உரிமைகள் வழங்கப்பட வேண்டும். அவர்களின் அபிலாஷைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்று பெரும்பான்மை மக்கள் எந்தக் காலத்தில் இணங்கப் போகிறார்கள்?

இப்பிரச்சினையைச் சிங்கள மக்கள், நேர் வழி நின்று, நியாய வழி நின்று பார்ப்பதற்கு அவர்களைத் திசைமாற்றுவதற்கு முன்வரக் கூடிய சிங்கள அரசியல்வாதி யார்?

அந்த அளவுக்கு எந்தச் சிங்கள அரசியல் வாதி ஒரு பூரண தேசாபிமானியாக இருக்கிறார். சிங்களவர்களில் பலர் அந்த வரிசையில் இருக்கிறார்கள் என்று நம்பி ஏமாந்தவர்கள் தமிழர்கள்.

ஆகையால் தேர்தல் மூலம் நாட்டின் எரியும் பிரச்சினையான இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என நினைப்பது சுத்த அபத்தம்.

தமக்குக் குடியுரிமை எதற்காக வழங்கப்பட்டது. யாருடைய தூண்டுதலால் வழங்கப் பெற்றது. இவை யாவும் எங்களை விடத் திருமதி பண்டாரநாயக்காவுக்குத் தான் அதிகம் தெரியும்.

வெளியுலக நிர்ப்பந்தத்தால் கிடைத்ததாக அவர் ஒப்புக்கொண்டிருந்தாலும் சரியான தொடு புள்ளியை வெளியே காட்ட மறந்து விட்டார்.

ஆனால் இந்து பத்திரிகையின் பிரதம செய்தியாளர் திரு. ஜி கே. ரெட்டி அந்த உந்து சக்தி இந்தியா தான் என்பதை வெளிப்படுத்தியிருக்கிறார். (இன்றைய உதயனில் உள்ள செய்தியைப் படியுங்கள்.)

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஒரு ஊற்றுக் கண்ணாகத் தான் அம்மையாருக்குக் குடியுரிமை வழங்குமாறு இந்தியா, இலங்கை அரசாங்க தலைமைத்துவத்தை வற்புறுத்தியது.

அதனை அம்மையார் மறக்கலாமோ? ஆரம்பத்திலேயே நன்றித் துரோகம் செய்யக் கூடாது.

திருமதி பண்டாரநாயக்காவுக்கு குடியுரிமை வழங்கியதற்கான உண்மைக் காரணத்தை ஜனாதிபதி ஜெயவர்த்தனாவும் வெளிச்சொல்லவில்லை.

சுதந்திரக் கட்சி எம். பி. ஒருவரை ராஜினாமாச் செய்வித்து, கட்சி வேட்பாளர் ஒருவர் மூலம் வெற்றிடத்தை நிரப்பாது இடைத் தேர்தலில் போட்டியிட்டு எம். பி. யாக வருவதற்கு திருமதி பண்டாரநாயக்காவுக்கு வாய்ப்புண்டு.

இதனையே, தாம் 1972 இல் செய்தது போல் திருமதி பண்டாரநாயககாவும் செய்யலாம் என்று ஜனாதிபதி கூறியிருக்கிறார்.

ஜனாதிபதி சொன்னார் என்பதற்காக அல்லாமல், இந்தியாவிற்கு செய்ய வேண்டிய நன்றிக் கடனாகக் கருதி தேர்தலைப் பின்னுக்கு வைத்து தமிழர், பிரச்சினையை நியாயமாகத் தீர்த்து வைக்க திருமதி பண்டாரநாயக்கா முன்னுரிமையும் ஆதரவும் நல்க வேண்டும். அப்போது தான் அவரின் கனவான் தன்மை வெளிப்படும்.

இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குச் சுதந்திரக் கட்சி முட்டுக்கட்டையாக இருக்கிறது என்ற அரச குற்றச்சாட்டையும் பொய்ப்பிக்கலாம்.

அது மட்டுமன்றி சாதாரண அரசியல் வாதி என்ற நிலையிலிருந்து தேசாபிமானி என்ற அந்தஸ்துக்கு சிறிமாவோவால் உயரவும் முடியும்.

## அம்பாறை மாவட்டத்தில் கடும் மழை! பெருவெள்ளம்!!

அம்பாறை ஜன.9

அம்பாறை மாவட்டத்தில் தொடர்ந்து கடும் மழை. பெருவெள்ளம்.

இதனால் கல்முனை–அம்பாறை வீதியும், அக்கரைப்பற்று – பொத்துவில் பாதையும் முற்றாகத் துண்டிக்கப் பட்டிருக்கின்றன.

அம்பாறை மாவட்டத்தில் அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, தாளைமுனை, நிந்தவூர், சாய்ந்தமருது, ஆகிய பகுதிகளில் கடந்த ஒருவாரமாகத் தொடர்ந்து மழை பெய்துவருகிறது.

இதே வேளையில் தொடர்ந்து பெய்த மழையினால் கல்லோயா வலது கரைவாய்க்காலில் சழி ஓடை ஆறு பெருக்கெடுக்கும் அபாயம் ஏற்பட்டிருக்கிறது. இதனால் பல்லாயிரக் கணக்கான நெல் பயிர்ச் செய்கை பாதிப்புறும் என அச்சம் தெரிவிக்கப் படுகிறது.

# மலையகத் தமிழர்களுக்கு தனி நிர்வாக மாவட்டம்

## கூட்டணி மாற்று யோசனையில் ஓர் அம்சம்

**அங்கம் 2**

> இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணுமுகமாக 29 பக்க நகல் யோசனைகள் அடங்கிய திட்டம் ஒன்றை இலங்கை அரசு, இந்தியாவிடம் சமர்ப்பித்தது.
>
> மாற்று யோசனைகளைக் கொண்ட 33 பக்க நகல்திட்டம் ஒன்றை, தமிழர் விடுதலைக் கூட்டணி இந்தியாவிடம் சமர்ப்பித்துள்ளது.
>
> இலங்கை அரசுக்குப் பதிலாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கூட்டணி மாற்று யோசனைகளில் முதல்பகுதி நேற்றுப் பிரசுரமாகியது.
>
> இரண்டாம் பகுதி இன்று பிரசுரமாகிறது.

### பகுதி 3

**மாநில ஆளுநர்கள்**

ஒவ்வொரு மாநிலத்துக்கும் ஒவ்வொரு ஆளுநர் இருப்பார். மாநில முதலமைச்சரின் ஆலோசனையுடன் ஜனாதிபதி, ஆளுநரை நியமிப்பார்.

ஒவ்வொரு மாநிலத்துக்கும் தெரிவு செய்யப்பட்ட சட்டசபை இருக்கும்.

ஒவ்வொரு சட்டசபைக்கும் தலைமை வகிக்கும் அதிகாரி ஒருவர் இருப்பார்.

மாநில சட்டசபைக்கான தேர்தல்கள், பிரதேச ரீதியில் வரையறுக்கப்பட்ட தொகுதிகளின் அடிப்படையில் இடம் பெறும்

தமிழ் மொழி மாநிலத்தில் முஸ்லிம்களுக்கு உரிய பிரதிநிதித்துவம் வழங்க அரசமைப்புச் சட்டத்தில் வழி செய்யப்பட வேண்டும்.

மாநில அரசுக்கான சட்டவாக்க அதிகாரம் மாநிலச் சட்டசபைக்கே வழங்கப்பட வேண்டும்

2 ஆம் பட்டியலில் கூறப்பட்டுள்ள விஷயங்கள் சம்பந்தமாக சட்டங்களை இயற்றும் அதிகாரம் மாநில சட்டசபைக்கு மட்டுமே உரியது (2ஆம் பட்டியல் பின்னிணைக்கப் பட்டுள்ளது )

மாநில சட்டசபையில் நிறைவேற்றப்பட்ட ஒரு சட்டம் ஆளுநரிடம் அனுப்பிவைக்கப்படும்.

ஆளுநர் சட்டத்தை ஏற்றுக் கையெழுத்திடலாம். அல்லது மீளாயவு செய்யத் திருப்பி அனுப்பி வைக்கலாம்.

திருப்பி அனுப்பப்பட்ட சட்டமூலம திருத்தத்துடனோ, அல்லது திருத்தம் இல்லாமலோ மீண்டும் சட்டசபையினால் நிறைவேற்றப்பட்டால், ஆளுநர் அதற்கு அங்கிகாரம் வழங்க வேண்டும்.

மாநில அரசின் நிறைவேற்று அதிகாரம், முதலமைச்சரிடமும் அவரின் அமைச்சரவையிடமும் வழங்கப்பட வேண்டும்.

மாநில அரசுக்குரிய நிறைவேற்று அதிகாரம், சட்டசபை நிறைவேற்றும் சட்டங்களைச் செயல்படுத்தக் கூடியதாக அமைய வேண்டும்.

**பெரிய அரசியல்கட்சி**

மாநிலச் சட்டசபையில பெரும்பான்மை உறுப்பினர்களைக் கொண்ட அரசியல் கட்சியின் தலைவரையே முதலமைச்சராக ஆளுநர் நியமிப்பார். தலது அமைச்சர்களை முதலமைச்சரே தெரிவு செய்வார்.

வரிகள், கட்டணங்களை விதிக்கவும், கடன்கள் நன்கொடைகள் மூலமாக வளங்களைச் சேகரிக்கவும் மாநிலச் சட்டசபைக்கு அதிகாரம் வழங்கப்பட வேண்டும்

மாநில அரசால் வகுலிக்கப்படும் வருமானம், பெறப்படும் கடன்கள் மற்றும் நிதி முதலியன 'மாநில அரசின் திரட்டப்பட்ட நிதியம்' என்ற பெயரில் வைக்கப்பட வேண்டும்.

சில வரிகளும் கட்டணங்களும் மத்திய அரசால் விதிக்கப்பட்டு சேகரிக்கப்பட வேண்டும்.

அப்படி ஒரு மாநிலத்தினுள் சேகரிக்கப்படும் நிதி அந்த மாநிலத்துக்கு வழங்கப்பட வேண்டும்.

நிதி ஆணைக்குழு ஒன்றை ஜனாதிபதி நியமிக்க வேண்டும். மத்திய வங்கி ஆளுநர் இதற்குத் தலைமை வகிப்பார். மூன்று உறுப்பினர்கள் குழுவில் இடம் பெற வேண்டும் சிங்களவர் ஒருவர். முஸ்லிம் ஒருவர், தமிழர் ஒருவர் ஆக இம் மூவரும் இருக்க வேண்டும்.

**மேல் நீதிமன்றம்**

ஒவ்வொரு மாநிலத்துக்கும் மேல் நீதிமன்றம் ஒன்று அமைக்கப்பட வேண்டும். இதை விட தேவையான நீதி மன்றங்களும் விசாரணை மன்றுகளும் இருக்க வேண்டும்.

மாநிலத்தில் உள்ள ஏனைய நீதிமன்றங்களுக்கு அப்பீல் நீதிமன்றமாக, மேல் நீதிமன்றம் இருக்கும்.

மாநிலத்தில் உள்ள ஏனைய நீதிமன்றங்கள், விசாரணை மன்றுகளை மேற்பார்வை செய்து கட்டுப்படுத்தும் அதிகாரங்கள் மேல் நீதிமன்றத்துக்கு வழங்கப்பட வேண்டும்.

மேல் நீதிமன்றத் தீர்ப்புகளுக்கு எதிரான மேன் முறையீடுகள், மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்லப்படும். அரசமைப்பு விவகாரங்களை உயர் நீதிமன்றம் கவனித்துக் கொள்ள வேண்டும்.

மாநில அரசில் பணியாற்றும் அரச மற்றும் பொது அதிகாரிகளைக் கொண்டதாகவும்;–

மாநில அரசின் கீழ் பணியாற்றுவதற்கு அனுப்பி வைக்கப்பட்ட அரச, பொது அதிகாரிகளைக் கொண்டதாகவும் உள்ள மாநில அரச சேவை ஒன்றை ஒவ்வொரு மாநில அரசும் அமைக்க வேண்டும்.

ஒவ்வொரு மாநிலத்திலும் மாநில பொதுச் சேவை ஆணைக்குழு இயங்க வேண்டும். மாநில பொதுச் சேவைக்கு ஆட்சேர்ப்பு, ஊழியர் மேல் ஒழுங்கு நடவடிக்கை எடுத்தல் ஆகியவற்றுக்கு இந்த ஆணைக்குழுவே பொறுப்பாக இருக்கும்.

### பகுதி 4:

**இந்திய வம்சாவளித் தமிழர்களுக்கான விசேட சட்டவிதி:**

இந்திய வம்சாவளித் தமிழர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யவும், பாதுகாப்பு, அரசாங்க நிர்வாகத்தில் பங்கு ஆகியவற்றை உறுதிப்படுத்தவும் உரிய நிர்வாக அமைப்பு ஒன்றை நிறுவ வேண்டும். உதாரணமாக, ஒரு நிர்வாக மாவட்டத்தை அமைக்கலாம்.

இந்திய வம்சாவளித் தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் தோட்டங்களை உள்ளடக்கியதாக கிராமசேவகர் பிரிவுகள் மாற்றி அமைக்கப்பட வேண்டும்.

இக் கிராமசேவகர் பிரிவுகள் எல்லாம் ஒன்றாக இணைக்கப்பட்டு ஒரு பிரதேச உதவி அரச அதிபர் பிரிவாக நிறுவப்பட வேண்டும்.

வவுனியா தெற்கு சிங்கள உதவி அரச அதிபர் பிரிவு உருவாக்கப்பட்டது போன்று இதைச் செய்யலாம்.

அப்படி நிறுவப்படும் உதவி அரச அதிபர் பிரிவுகளை இணைத்து ஒரு நிர்வாக மாவட்டமாக அல்லது தேர்தல் மாவட்டமாக அமைக்க வேண்டும்.

தமிழ் மொழி மாநிலத்திற்கு வெளியில் வாழும் இந்திய வம்சாவளித் தமிழர், இந்த நிர்வாக அல்லது தேர்தல் மாவட்டத்தில் வசித்து தங்களின் சட்டபூர்வமானதொழில்களைச் செய்ய அவர்களுக்கு உரிமை வழங்கப்பட வேண்டும்.

இது போன்று தமிழ் மொழி மாநிலத்திலும் இந்திய வம்சாவளித் தமிழருக்கு அந்த உரிமை வழங்கப்பட வேண்டும்.

**பட்டியல் ஒன்று**

கீழ்வரும் துறைகளுக்கான அதிகாரங்கள் மத்திய நாடாளுமன்றத்துக்கு இருக்கும். பாதுகாப்பு, வெளிவிவகாரம், நாணயம், தபால்-தொலைபேசித்தொடர்புகள், குடியகல்வு –குடிவரவு, வெளிநாட்டு வர்த்தகம், ரயில்வே, விமான நிலையங்கள், விமானசேவை, ஒலிபரப்பு, ஒளிபரப்பு, சுங்கம், தேர்தல், சனத்தொகை கணிப்பு

**பட்டியல் இரண்டு**

கீழ்வரும் துறைகளுக்கான அதிகாரங்கள் மாநில சட்டசபைக்கு வழங்கப்பட்டுள்ளன;

- ✱ உள்ளூர் சட்டம், ஒழுங்கு பராமரிப்பு, பொலீஸ்
- ✱ காணி, காணி உபயோகம்
- ✱ கல்வி (பல்கலைக்கழகம், தொழில் நுட்பக் கல்வி உட்பட)
- ✱ புதைபொருளாராய்ச்சி, கலாசாரம்
- ✱ கைத்தொழில்கள்
- ✱ மீன்பிடித்துறை
- ✱ கலால்
- ✱ விவசாயம்
- ✱ நீர்ப்பாசனம்
- ✱ சமூகசேவை
- ✱ சுகாதாரம்
- ✱ சிறைச்சாலை
- ✱ மாநில போக்குவரத்துச் சேவை வீதிகள்
- ✱ கூட்டுறவுத்துறை

(நாளை தொடரும்)

## மாணவ ஆலோசகர் குழு

யாழ்ப்பாணம், ஜன.9

பதின்மூன்று விரிவுரையாளர்களை உள்ளடக்கிய மாணவ ஆலோசகர் குழு யாழ் பல்கலைக்கழகத்தினால் அமைக்கப்பட்டு உள்ளது.

பாடங்களைத் தெரிவு செய்தல், விடுதி வசதி பெறுதல், பதிவு செய்தல், உடல் நலம் சம்பந்தமான ஆலோசனை தேவைப்படும்போது புதிய மாணவர்கள் இவர்களை நாடலாம்.

பேராசிரியர் சி. மகேஸ்வரன், பேராசிரியர் எஸ். வி. பரமேஸ்வரன், கலாநிதி கே. கந்தசாமி, கலாநிதி ஆர்.மனோகரன், திருமதி ஜே. கிருஷ்ணானந்தசிவம், கலாநிதி ரி. விஜயசமூர்த்தி, கலாநிதி திருமதி. டி. சரவணபவானந்தன், கலாநிதி எஸ். பவானி, திரு.. எஸ். கனகநாதன், திரு வி. பி. சிவநாதன், கலாநிதி இ.பாலசுந்தரம், திரு. எஸ் ரி. இராசேஸ்வரன், திரு. எம். வேதநாதன் ஆகியோர் இம் மாணவ ஆலோசகர் குழுவில் இடம்பெற்று உள்ளனர்.

**இளைஞரின் உணர்வு ஊற்றைத் திறந்த சம்பவம்:**

# செந்தமிழ் மாந்தித் திளைத்த வேளையில் நடந்த பயங்கரம்..!

## தமிழாராய்ச்சி மாநாட்டில் உயிரிழந்தோர் நினைவு தினம் நாளை

தமிழ் மக்களின் கூட்டம் கூடும் உரிமையைப் பறித்து —

அவர்கள் தமது பண்பாட்டு கலாசார நிகழ்ச்சிகளை ஒன்று கூடி நிகழ்த்துவதை தடைசெய்து —

அவர்கள் மீது வன்முறையை ஏவிய துயர சம்பவத்தின் 12 ஆவது நினைவு தினம் நாளை ஆகும்.

நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டை யாழ்ப்பாணத்தில் நடத்த அனுமதியாதிருக்கஅரசு மேற்கொண்டதில்லுமுல்லு நடவடிக்கைகள் ஏராளம்.

ஆயினும், மன்றத்தின் செயலாளரான கட்டடக் கலைஞர் திரு எஸ். துரைராஜா, பொருளாளர் கோபாலபிள்ளை மகாதேவா போன்றோரும், துடிப்பு மிக்க இளம் உறுப்பினர்களும் புதிதாகத் தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பேராசிரியர் சு. வித்தியானந்தனுக்குப் பக்க பலமாக ஒத்துழைக்க, அருள்திருத் தனிநாயகம் அடிகளாரின் நல்லாசியுடன் மாநாட்டு ஏற்பாடுகள் தடபுடலாக இனிதே நடந்தேறின.

மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இலங்கைக்கு வருகை தரவிருந்த வெளிநாட்டுத் தமிழறிஞர்களுக்கு இறுதி நேரத்தில் விசா மறுக்கப்பட்டது. தப்பித் தவறி முன்கூட்டிப் பெறப்பட்ட விசாவில் இலங்கைக்கு வருகை புரிந்த வெளிநாட்டுத் தமிழாராய்ச்சியாளர்கள் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் வைத்தே நாட்டிலிருந்து வெளியேற்றப் பட்டார்கள்.

எனினும் உலகின் பொது அபிப்பிராயத்துக்குப் பயந்த முக்கூட்டரசு நான்காம் அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு ஆரம்பமாவதற்கு மூன்று நாட்கள் முன்னதாக அப் பண்பாட்டு நிகழ்ச்சிக்கு எதிராகப் போடப்பட்ட தடைகளைத் தளர்த்திற்று.

முதலில் அனுமதி மறுக்கப்பட்ட வீரசிங்கம் மண்டபத்திலேயே அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றத்தின் தோற்றுனரான அருள்திருத்தந்தை தனிநாயகம் அடிகளார் மாநாட்டை வைபவ ரீதியாகத் திறந்து வைத்தார். யாழ்ப்பாணக் குடாநாடே விழாக்கோலம் பூண்டு மாநாட்டை கொண்டாடியது.

**- த. இன்பரசு -**

மாநாட்டிற்கு வந்திருந்த அயல்நாட்டு தமிழாய்வாளர்களுக்கு பிரியாவிடை நல்கும் வழியனுப்பு விழா மாநாட்டின இறுதி நாளன்று (10-1-1974) யாழ். திறந்தவெளியரங்கில் நடைபெறுவதாக ஏற்பாடு.

யாது காரணம் பற்றியோ யாம். திறந்த வெளியரங்கின் புறக் கதவுகள் பூட்டப்பட்டிருந்தன. இதனால் இறுதி நேர மாற்று ஒழுங்காக வீரசிங்கம் மண்டபத்தில் தான் அந் நிகழ்ச்சியையும் நடத்த வேண்டிய நிர்ப்பந்தம் மாநாட்டு நிர்வாகிகளுக்கு!

வழியனுப்பு விழாவுக்கு திரண்டிருந்த ஜன சமுத்திரமோ ஐம்பதினாயிரத்துக்கும் அதிகம்

ஆகவே, அந்த ஜன சமுத்திரத்தை மண்டபத்திற்குள் உள்ளடக்க இயலாத காரணத்தினால், சடுதியாக மண்டபத்தின் முன் நிறுவப்பட்ட திடீர் மேடையில் வெளிநாட்டுத் தமிழாய்வாளர்கள் முற்றவெளி மைதானத்தில் அமைதியாக அமர்ந்திருந்தவாறு பொதுமக்கள் நிகழ்ச்சிகளை அவதானித்துக் கொண்டிருந்தனர்.

தமிழகத்தைச் சேர்ந்த இஸ்லாமியத் தமிழறிஞர் நைனார் முகமது அம் மக்கள் சமுத்திரத்தின் மத்தியில் ஆற்றொழுக்காக தேன் சொட்டும் இன் தமிழில் உரை நிகழ்த்திக் கொண்டிருக்க அவர் தமிழை மாந்தித் திளைத்திருந்தது செந்தமிழர் கூட்டம்.

அக் கட்டத்தில்தான் அம் மக்கள் சமுத்திரத்தின் யாதொரு முகாந்திரமும் இல்லாது பொலிஸார் புகுந்து முன்னறிவிப்பு ஏதுமின்றி குண்டாந்தடிப்பிரயோகம் செய்துக் கண்ணீர் புகைக் குண்டுகளைப் பொழிந்தனர்.

எதிர்பாராத திடீர் தாக்குதலால் அல்லோல கல்லோலப்பட்ட மக்கள் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் யாவரும் சிதறி ஓடினர்.

மிதியுண்டும், அறுந்து விழுந்த மின் கம்பிகளால் பாய்ந்த மின்சாரத்தினாலும பச்சைத் தமிழர் ஒன்பதின்மர் கொல்லப்பட்டனர். நூற்றுக்கணக்கானோர் காயமடைந்தனர்; பெண்கள் உடைநெகிழ மானபங்கமுற்றனர்.

விழாக்கோலத் தோற்றப் பொழிவுடன் காட்சியளித்த யாழ். நகரும் அயல் கிராமங்களும் கணப்பொழுதில் இழவு வீடாக மாறின. 1974ம் ஆண்டு பொங்கல் பெருநாளின்போது யாழ்ப்பாணத்தில் எந்தத் தமிழன் வீட்டிலும் பால் பொங்கவில்லை. மாறாக அதுவரை பொறுமை காத்து நின்ற இளையதலைமுறையினரின் உள்ளங்கள்தாம் எரிமலையாக குமுறிப் பொங்கின.

தமிழ் இளைஞர்களின் உணர்வு ஊற்றைத் திறந்த சம்பவம் இது தான்.

இத்தனை நடந்த பின்பும் ஆளவந்தாரிடம் இருந்து ஒரு வார்த்தை தானும் வருத்தம் தெரிவிக்கப்படவில்லை. நீதி விசாரணை வேண்டுமென வலியுறுத்தப்பட்ட போதும அக்கோரிக்கை உதாசீனம் செய்யப்பட்டது.

இதனால் பொது விசாரணைக்குழு ஒன்று தனியாக நியமிக்கப்பட்டது

அமைதி காத்து நின்ற மக்கள் கூட்டத்தின் மத்தியில் பொறுப்பற்ற முறையில் நடந்து கொண்டதற்காக பொலீஸார் மீது அந்தக் குழு கண்டனம் தெரிவித்திருந்தது.

தமிழாராய்ச்சி மாநாட்டில் உயிரிழந்த தமிழ் இளைஞர்கள், தமிழ்த் தியாகிகள் நினைவாக ஓர் அடி உயரத்துக்கு மேற்படாத ஒன்பது நினைவுத் தூபிகள் அவர்கள் உயிர் பிரிந்த இடத்திற்கு அருகிலேயே முதலாண்டு நினைவு தினத்திற்கு முன் முதலிரவில் நிறுவப்பட்டது.

ஓராண்டு கடக்கு முன் மேற்படி நினைவுத் தூபிகள் தகர்க்கப்பட்டன. பொங்கி எழுந்த இளைய தலைமுறையினர் இரண்டாம் ஆண்டு நினைவு தினத்திற்கு முன் நினைவுச் சின்னமாக காத்திரமான ஒரு பெரும் தூணையே எழுப்பினார்கள். இரவோடு இரவாக எழுப்பப்பட்ட அந்த நினைவுத் தூணின் முன்பாக சாவ மத வழிபாடுகள் தடையின்றி மறுநாட்காலை இடம்பெற வழிவகுத்தார்கள்.

திரும்பவும் ஒரு நாள் நள்ளிரவில் பாதுகாப்புப் படையினரால் அவ்வட்டாரமே சூழச் சுற்றி வளைக்கப்பட்டு தமிழ்த் தியாகிகள் நினைவுத் தூண் மூன்று துண்டங்களாக தகர்க்கப்பட்டது.

தகர்க்கப்பட்ட நிலையில் பேணப்படும் பொருட்டாக மூன்று துண்டங்களையும் அவ்விடமே விட்டு வைத்து, புதிதாக ஒன்பது சிறு தூண்களைப் பிறை வடிவில் நிறுவி மூன்றும் ஆண்டு நினைவு தினத்தில் சர்வமத வழிபாடுகள் அதே ஸ்தலத்தில் நடைபெற திரும்பவும் இளைஞர்கள் உதவினர்.

யாழ்ப்பாண மக்களால் பகிஷ்கரிக்கப்பட்ட தமது முதல் யாழ். வருகையின் நினைவாக பிரதமர் பிரேமதாசா தகர்க்கப்பட்ட நினைவுத் தூணுக்குப் பதிலாக புதியதொரு தூணைப் பன்னிரு மணித்துளி நேரத்திற்குள் எழுப்புவித்தார். அவரது சாதுரியம் அது.

எது எப்படியிருப்பினும் 1983 இனக்கலவரங்களின் பின் தமிழ்த்

(4 ஆம் பக்கம் பார்க்க)



### பொய்யாமொழி

**குறள்:**

பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை
வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல்.

**பொருள்:**

பொருள் சேர்க்கும்போது பழிக்கு அஞ்சிச் சேர்த்துச் செலவு செய்யும் போது பகுத்து உண்பதை மேற்கொண்டால், அவ்வாழ்க்கையின் ஒழுங்கு எப்போதும் குறைவது இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோலகட்டி தயாரிப்புகள்
கடந்த 60 வருட காலமாக
மக்கள் மனதில் நிலைத்த பெயர்
தரம் - நிரந்தரம் சுவை - தராதரம்
இவை அனைத்தும் ஒருங்கே அமைத்து
தயாரிக்கப்படுகின்றது.
ஏகப்பிரதிநிதிகள்:-
ஜோ. எகட்டன்
செனித் மார்க்கட்டிங், யாழ்நகர்.

# உதயன்

09-01-1986

தோலகட்டி தயாரிபபுகள்
கடந்த 60 வருட காலமாக
மக்கள் மனதில் நிலைத்த பெயர்
தரம் - நிரந்தரம் சுவை - தராதரம்
இவை அனைத்தும் ஒருங்கே அமைத்து
தயாரிக்கப்படுகின்றது.
ஏகப்பிரதிநிதிகள்:-
ஜோ. எகட்டன்
செனித் மார்க்கட்டிங், யாழ்நகர்.

## வித்தாரம்

முரளித் தம்பியாரே! வாரும் வாரும். என்ன இன்னடைக்குக் கொஞ்சம் மூக்குக் கனத்தாப்போலை இருக்கு. தொண்டையும் கரகரத்துப்போச்சு. ஏன், நேற்றைக்குப் பெய்த துந்துமி மழையிலை நனைஞ்சிட்டியாக்கும்.

நேற்றைக்கு உன்னோடை வடிவாக்கதைக்க முடியாமல் போச்சு. அதாலை ஒரு முக்கியமான விஷயத்தையும் சொல்ல மறந்திட்டேன்.

நேற்றைச்கு ஜனவரி எட்டாம் திகதி அது தான் முந்தின பிரதம மந்திரி எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவின் பிறந்த தினம்.

சிறிமாவுக்குக் குடியுரிமை குடுத்ததோடை அவ மீண்டும் அரசியலுக்கு மும்மரமாய் வந்திட்டா. அது ஒண்டு-

செத்துப்போன பண்டாரநாயக்கா எங்கடை தந்தையோடை செய்த ஒப்பந்தம்பற்றி இப்ப அடிக்கடி பேசப்படுகிறது. அது இரண்டு.

இந்த இரண்டு விஷயங்களும் எஸ் டபிள்யு. ஆர் டியை நினைக்கச் செய்யுது

உந்த எட்டாம் நம்பரைச் சிலபேருக்குக் கண்ணிலையும் காட்டேலாது. ஆனா சிலபேருக்குப் பெரிய அதிஷ்ட நம்பரும் அது தான்.

உனக்குத் தெரியுமோ, என்னவோ இப்ப சாதகம், குறிப்பு, ராசிபலன் இதுகளைவிட அந்த நியுமரோலொஜிதான் சனத்திட்டை பிரபலமாகி வருகுது,

ஆஸ்பத்திரியிலைபிள்ளை பிறந்திட்டாப் போதும், அந்தத் திகதி நம்பருக்கு ஏத்தாப்போலை பேர் வைக்கிறதுக்கு தகப்பன்மார் தலையை உடைப்பினம் காலத்துக்கு ஒரு உடுப்பு பாஷன் மாதிரி. மனிதன்ரை நம்பிக்கையும் மாறுது.

எட்டாம் நம்பர்காரர் அரசியலுக்குப் போனால் நல்லாப பிரகாசிப்பினம் எண்டு; ஆனா அவைக்கு முடிவு கொஞ்சம் அப்பிடியும் இப்பிடியுந்தான் எண்டும் சொல்லுறதுண்டு. இந்த பண்டாரநாயக்காவுக்கும் விபரீத முடிவுதானே ஏற்பட்டது.

அது இருக்கட்டும். பழைய பண்டா — செல்வா ஒப்பந்தத்திலை குடுக்க இருந்த மாநில சுயாட்சியைத்தான் கூட்டணி இந்தியா மூலம் மாற்று யோசனை எண்டு ஜே ஆரிட்டை குடுத்திருக்கு. சொற்ப சொற்ப மாற்றங்களோடை தான்.

ஆனா அவர் என்ன வீரப்புப் பேசிறார் தெரியுமே பண்டா-செல்வா ஒப்பந்தத்தை எதிர்த்துக் கண்டிக்கு பாதயாத்திரை போனது நான். அதையே என்னெண்டு குடுக்க முடியும். பண்டாவின்ரை மகன் அனுராவும் எதிர்க்கிறார். இப்பிடி எல்லாம் தங்கடை எம். பி. மாருக்கு முன்னாலை பேசி அப்பிளாஸ் வாங்கியிருக்கிறார்.

இந்தியாவுக்குப் போய் கதைக்கயிக்கை பதுங்கினகோழிக்குஞ்சு மாதிரி எல்லாத்தையும் கேட்டுக் கொண்டு வாறது. இஞ்சை வந்தவுடன் வீருப்புப் பேசிறது.

உது இந்தியாவுக்கும் தெரியும். உவர் ஒளிச்சு விளையாடின மாதிரி இந்தியாவுக்கும் விளையாடத் தெரியாதே. அதுகும் சந்தர்ப்ப சூழ் நிலைகளைப் பாத்துக் கொண்டு இருக்குதாக்கும்.

பண்டாரநாயக்கா, தான் பதவிக்கு வாறதுக்காக சிங்களம் மட்டும் சட்டத்தைக் கொண்டு வந்தது உண்மை தான். ஆனால் தன் ரைபிழையை உணர்ந்து பிறகு தமிழருக்கு உரிமைகளைக் கொடுக்க வந்தார். ஆனால் இப்ப இருக்கிறவர் என்னண்டா தான் செய்த பிழையைப் பிறகும் பிறகும் செய்யிற கோறணையிலை கதைக்கிறார்.

என்ன செய்யிறது? உவர் சொல்லக் கதி நாங்கள் கேட்கக் கதி. ஆனா உது நெடுக ஓடாது. எல்லாத்துக்கும் ஒரு முடிவு வராமல் இருக்காது.

"பி ஒல்வேய்ஸ் அன் ஒப் டிமிஸ்ட் ருதர் தான் பெனிமிஸ்ட்" எண்டு இங்கிலீஷிலை சொல்லுறதை எங்கடை படினத்தார் "எல்லாம் நன்மைக்கே இறைவா கச்சி ஏகம்பனே" எண்டு எப்பவோ பாடி விட்டாரே.!

கொண்ணோடி

சிறிமாவுக்குக் குடியுரிமை:

# இந்தியா நெருக்கியதால் கிடைத்தது

கொழும்பு, ஜன. 9

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்குக் காணப்படும் தீர்வு, சிங்கள அரசியல் கட்சிகளின் ஏகோபித்த ஆதரவைப் பெற்றதாக இருக்க வேண்டும் இதற்காகவே திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கு குடியுரிமை வழங்கப்பட வேண்டும் என்று இலங்கை ஜனாதிபதியை, இந்தியா கடந்த இரண்டரை ஆண்டுகளாக நெருக்கி வந்தது.

பிரபல இந்திய ஆங்கில நாளிதழான 'இந்து' பத்திரிகையில அதன் பிரதம செய்தியாளர் திரு. ஜி கே. ரெட்டி மேற்கண்டவாறு எழுதியுள்ளார்.

சிறிமாவோ பற்றிய ஜெயவர்த்தனவின் முடிவை டில்லி வரவேற்கிறது என்ற தலைப்பில் திரு ரெட்டி இதை எழுதியுள்ளார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுவதில் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவும் முக்கிய பங்கு வகிக்க வேண்டும் என்று கருதியே இந்தியா தனிப்பட்ட முறையிலும் குடியுரிமை வழங்குமாறு இலங்கை ஜனாதிபதியை வலியுறுத்தி வந்தது.

இது சம்பந்தமாக 1983-ல் தான் இந்தியா முதலில் குரல் கொடுத்தது.

அதன் பின்னர் ஒவ்வொரு கட்டத்திலும் இது பற்றி இலங்கை அரசுக்கு இந்தியா கூறி வந்தது.

இந்திய உதவியுடன் திரு. ஜெயவர்த்தன காணும் சமரச தீர்வுக்கு இடையூறாக திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா இருக்கக் கூடாது என்பதே இந்தியா, திருமதி சிறிமா விஷயத்தில் தலையிட்டதற்குக் காரணம்.

இனப்பிரச்சினை பற்றிய பேச்சுக்களை ஒவ்வொரு கட்டத்திலும் இந்தியா திருமதி பண்டாரநாயக்காவுக்குக் கூறியே வந்தது.

தீர்வு காணுவதற்கு திரு ஜெயவர்த்தன எடுக்கும் முயற்சிகளை திருமதி பண்டாரநாயக்கா பகிரங்கமாக எதிர்க்கக்கூடாது என்பதை உறுதிப்படுத்துவதே இந்தியாவின் நோக்கம்.

இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தன, திருமதி பண்டாரநாயக்காவுக்குக் குடியுரிமையை மீண்டும் வழங்குவதாக இந்தியாவுக்கு உறுதியும் அளித்திருந்தார்.

ஆனால் ஏதோ ஒரு காரணத்தைச் சொல்லி கடந்த இரண்டரை ஆண்டுகளாகக் கடத்தி வந்தார்.

திருமதி பண்டாரநாயக்காவுக்குக் குடியுரிமையைப் பெற்றுக் கொடுப்பதன்மூலம், இந்தியாவின் உதவியுடன் திரு. ஜெயவர்த்தன காணும் சமரசத் தீர்வுக்கு திருமதி பண்டாரநாயக்காவின் நிபந்தனையற்ற ஆதரவு கிடைக்கும் என்று இலங்கை பற்றிய இந்திய நிபுணர்கள் கனவு காணவில்லை.

திருமதி பண்டாரநாயக்காவின் திட்டம், குடியுரிமையை முதலில் பெற்றுக்கொண்டு தமிழர் சம்பந்தமான தீர்வை முன்வைத்து பொதுத் தேர்தலை நடத்தும்படி நெருக்குவது ஆகும்.

1980இல் இந்திரா காந்தி பதவிக்கு மீண்டும் வந்ததுபோல், இலங்கைச் சூழ்நிலையில் சிங்கள தேசிய வாதத்தை முன்வைத்து தானும்பதவிக்கு வரலாமென்று திருமதி பண்டாரநாயக்கா நம்பிக்கை வைத்திருக்கிறார். திரு. ரெட்டி, 'இந்து' இதழில் எழுதியுள்ளார்.

## இடைத்தேர்தலில் போட்டியிட்டு சிறிமா எம். பியாக வரலாம்

### ஜனாதிபதி சொல்கிறார்

கொழும்பு, ஜன 9

இடைத்தேர்தல் ஒன்றை உருவாக்கி, அதில் பொதுத்தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்துப் போட்டியிட்டு திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா நாடாளுமன்றம் வரலாமே.

இப்படி ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன. அரசாங்க நாடாளுமன்றக் குழுக்கூட்டத்தில் பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஜனாதிபதி மேலும் சொன்னதாவது,

சுதந்திரக்கட்சி ஆட்சிக்காலத்தில் நாடாளுமன்றத்தின் ஆயுள் மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீடிக்கப்பட்டது. இதை எதிர்த்து நான் கொழும்பு தெற்கு எம்.பி பதவியை ராஜினமாச் செய்தேன். இடைத்தேர்தல் மூலம் நான்மீண்டும் நாடாளுமன்றம் சென்றேன்.

அதுபோன்று திருமதி சிறிமாவே பண்டாரநாயக்காவும் இடைத் தேர்தல் ஒன்றை உருவாக்கி நாடாளுமன்றம் வரலாம்.

ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதுடன் பொதுத் தேர்தலை நடத்தலாம் என்று தான் நான் முடிவு செய்து இருந்தேன்.

ஆனால் சுதந்திரக்கட்சி வேட்பாளராக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட திரு. கொப்பேக்கடுவாவின் ஆதரவாளர்கள், சுதந்திரக்கட்சி தோற்றால் நாட்டிலே இரத்தக்களரி ஓடும் என்று சொன்னார்கள். இதைத் தொடர்ந்தே நான் பொதுத்தேர்தல் நடத்தும் எண்ணத்தைக் கைவிட்டு, சர்வஜன வாக்கெடுப்பை நடத்தினேன்.

இப்படி ஜனாதிபதி சொன்னார்.

## ரூபவாஹினி

09 - 01 - 1986

| | | |
|---|---|---|
| 5-00 | — | செய்திகள் |
| 5-05 | — | பீட்டில்ஸ் |
| 5-35 | — | பொலோமீ |
| 5-45 | — | குழந்தைகள் -நிகழ்ச்சி |
| 6-00 | — | 'நத்தையின் வாழ்க்கை' |
| 6-30 | — | செய்திகள் (தமிழ்) |
| 6-55 | — | தமப்பற் ஷோ |
| 7-25 | — | ரஸகலாஸ- (கலைபற்றிய கண்ணோட்டம்) |
| 8-00 | — | செய்திகள் (சிங்களம்) |
| 9-00 | — | செய்திகள் (ஆங்கிலம்) |
| 9-30 | — | 'அஹட்ட-கனட்ட' |
| 9-50 | — | 'யுத்தத்தில் - உலகம்' அங்கம் 15 |
| 10.50 | — | ஒளிபரப்பு முடிவு |

## தேயிலைக்கு.....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒழுங்கு செய்துள்ளது.

இதனிடையில் தமிழ் ஈழ இராணுவம் வெளியிட்டுள்ள இன்னொரு பிரசுரம் ஒன்றில், "காலம் காலமாக இனவெறி அரசுகளால் ஒடுக்கப்பட்டு நாடற்றவர்களாக்கப்பட்டுள்ள தோட்டத் தொழிலாளர்களைப் பாதிக்காவண்ணம் தேயிலையில் நஞ்சு கலக்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கைக்கு நாம் உரிமைகோருகின்றோம்.

ஸ்ரீலங்கா அரசை மென்மேலும் சீர்குலைக்கும் வகையில் ஏனைய கேந்திர பொருளாதார நிலைகளுக்கும் எமது நடவடிக்கை விஸ்தரிக்கப்படும்" இப்படிக் கூறப்பட்டுள்ளது.

## பொங்கலோ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஞாயிற்றுக்கிழமைகளிலும் தொடர்ந்து நகைகள் வழங்கப்படும். ஒரு மாதகாலத்தினுள் சகல நகைகளும் திருப்பிக் கொடுக்கப்படும்.

நகைகளை அடகுவைத்தவர்கள், அல்லது அவர்களின் அத்தாட்சிப் படுத்தப்பட்ட பிரதிநிதிகள் மட்டுமே அடையாள அட்டைகளுடன் வங்கிகள் வந்து நின்று நகைகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

வேறு எவரும் வங்கிக்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். வங்கிக்கு அருகிலும் எவரும் நிற்கக்கூடாது என்று கண்டிப்பான உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது

## தொண்டா....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கின்றது" என்று சொன்னார்.

நாடற்றவர்களாகக் கருதப்படும் 4 லட்சம் மலையகத் தமிழர் நிலை குறித்து இந்திய அரசு தகுந்த நடவடிக்கை எடுக்கும் என்று தான் கருதுவதாகவும் அமைச்சர் தொண்டமான் சொன்னார்.

இந்தியாவில் அகதிகளாக உள்ள இலங்கைத் தமிழர்கள் தாயகம் திரும்பும்வரை, மலையகத்தில் உள்ள இந்தியக் குடியுரிமை பெற்றவர்களை இந்தியா திருப்பி அழைக்காது என்று பிரதமர் ராஜீவ் காந்தி ஒருமுறைக்கு இருமுறை திருப்பிச் சொல்லிவிட்டார்.

அதுபற்றியே டில்லியில் அனைவருடனும் திரு. தொண்டமான் பேச்சுக்களை நடத்தினார்.

## கிழக்கில்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நெடுஞ்சாலைப் போக்குவரத்து முற்றாகத் துண்டிக்கப்பட்டிருக்கிறது.

ஆயுதப்படையினர் வந்த ஜீப் ஒன்றும் வெள்ளத்தில் புரண்டதாகவும்—

ஆனால் அதில் பயணம் செய்த படைவீரர்கள் எல்லோரும்அபாயமின்றி தப்பி விட்டார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மன்னம்பிட்டி பாலத்திற்கு அருகில் இருக்கும் இராணுவ முகாமினுள் வெள்ளம் புகுந்து விட்டது.

மட்டக்களப்பு பகுதியில் சித்தாண்டி, தேவபுரம், முறக்கொட்டாஞ்சேனை, ஏறுவூர் ஆகிய பகுதிகளில் பல குடும்பங்கள் வெள்ளம் காரணமாக வீடுகளை விட்டு வெளியேறியுள்ளன.

பாடசாலைகளில் தஞ்சம் புகுந்திருக்கும் இந்தக் குடும்பங்களுக்குப் பங்கீட்டு அடிப்படையில் உணவு வழங்கப்படும் என மட்டக்களப்பு அரசாங்க அதிபர் திரு. எம். அந்தோனிமுத்து உதயன் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

இதேவேளை திருகோணமலையிலும் கடந்த இரண்டு நாட்களாகத் தொடர்ந்து மழை பெய்து வருகிறது

(மற்றைய செய்தி மூன்றும் பக்கத்தில்.)

## செந்தமிழ்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தியாகிகள் தினத்தில் மாலையில் இடம்பெறும் அஞ்சலிப் பொதுக் கூட்டங்கள் கைவிடப்பட்டு காலையில் இடம்பெறும் வழமைப் பிரகாரமான சர்வமத வழிபாடுகள் தமிழ்த் தியாகிகளது நினைவுச் சின்னங்களின் முன்பாகத் தொடரப்பட்டே வந்துள்ளன.

நாளைய நினைவுத் தினத்தன்று பழைய ஒல்லாந்தர் கோட்டையை அண்மித்திருக்கும் அப் புனித பூமியை நெருக்குவதற்கே பொது மக்கள் அஞ்சும் நிலையில் தமிழ் மாநாட்டின் போது மரித்த தியாகிகள் நினைவாக அறிவிக்கப்பட்டபடி ... ஒழுங்குகளை அனுசரித்து ... அப் பிரார்த்திப்போம்.

## விளையாட்டரங்கு

யாழ்ப்பாண மாவட்டத்தில்

### கூடைப் பந்தாட்ட விளையாட்டு தரம் உயர புதிய நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜன.9

யாழ்ப்பாணத்தில் கூடைப்பந்தாட்ட விளையாட்டின் தரத்தை உயர்த்துவதற்கு பல நடவடிக்கைகள் விரைவில் எடுக்கப்படவிருக்கின்றன.

இதற்காக ஆக்கபூர்வமான செயற்திட்டம் ஒன்றை நடைமுறைப் படுத்தவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் இந்த ஏற்பாடுகளைச் செய்துவருகிறது.

இதுவரை காலமும் வடமாகாண கூடைப்பந்தாட்டச் சங்கம் என்ற பெயரில் இயங்கி வந்த இந்த அமைப்பு புதிய ஆண்டில் யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்ட சம்மேளனம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

பாடசாலை மாணவர், மாணவிகள் மத்தியிலும் கழகங்கள் மத்தியிலும் கூடைப் பந்தாட்ட தரத்தை உயர்த்தும் வகையில் சுற்றுப்போட்டிகள், பயிற்சி வப்குப்புக்கள் ஆகியவற்றை சங்கம் நடத்தும்.

கழக அணிகள் பயிற்சி பெறுவதற்கு வசதியாக கூடைப்பந்தாட்ட களம் ஒன்றை அமைக்கவும் சங்கம் திட்டமிட்டிருக்கிறது.

சங்கத்தின் அடுத்த கூட்டம் எதிர்வரும் 15-ஆம் திகதி யாழ்ப்பாணம் வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் நடைபெறுகிறது.

கூடைப்பந்தாட்ட தரத்தை உயர்த்துவதில் சங்கத்துடன் இணைந்து செயற்படவிரும்பும் சகல கழகங்களும், பாடசாலைகளும் அந்தக் கூட்டத்திற்கு சமுகமளிக்கும்படி கேட்கப்பட்டிருக்கிறார்கள்.

பின்வருவோர் சங்கத்தின் நடப்புவருட உத்தியோகத்தர்களாக தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்கள்:-

தலைவர்:- டாக்டர் ரி. விநாயமூர்த்தி, செயலாளர் திரு. ஜே என். பொன்னையா, உப செயலாளர் செல்வி. எம்.எல். டொமினிக், பொருளாளர் திரு. கே. டபிள்யூ. விமலராஜா.

### கலைஒளிகிண்ணத்திற்கு இணுவிலில் சுற்றுப் போட்டி

யாழ்ப்பாணம், ஜன. 9

இணுவில் கலை ஒளி மன்றம நடத்தும் ஏழு பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

'கலை ஒளி' வெற்றிக் கிண்ணத்திற்காக இந்தச் சுற்றுப்போட்டி நடத்தப்படுகிறது.

யாழ் மாவட்ட ரீதியில் நடைபெறும் இந்தச் சுற்றுப் போட்டியில் யாழ் மாவட்டத்தில் உள்ள எல்லா விளையாட்டு அணிகளும் பங்குபற்றலாம்.

போட்டிக்கான விண்ணப்ப முடிவு திகதி எதிர்வரும் ஜனவரி 20 ஆகும். விண்ணப்பங்களை "செயலாளர், கலை ஒளி மன்றம், இணுவில்" என்ற விலாசத்தற்கு அனுப்பி வைக்கும்படி கேட்கப்பட்டுள்ளது.

## அடகு நகைகளை மீள ஒப்படைப்பது குறித்து வங்கி நிர்வாகம் அறிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 9

மக்கள் வங்கியில் அடகு வைத்த நகைகளை நாளாந்தம் 100 நகைகள் வீதம் பலாலி இராணுவ முகாம் அருகில வைதது சொந்தக்காரரிடம் திரும்பக் கையளிக்கும் திட்டத்தை நாம் முற்றாக ஏற்றுக் கொண்டோம்.

இது சம்பந்தமாக கொழும்புக்கு நேரடியாகச் சென்று மக்கள் வங்கியின் உயர் அதிகாரிகள், மாவட்ட அமைச்சர் ஆகியோருடன் தொடர்பு கொண்டு இத் திட்டத்தை செயற்படுத்த உறுதி மொழி பெற்றுத் திரும்பினோம்.

இபபடியிருகக, இந்தத் திட்டம் வட பிராந்திய முகாமையாளரினால் நிராகரிக்கப்பட்டுவிட்டது என்று கூறுவது உண்மைக்குப் புறம்பானதாகும்.

மக்கள் வங்கி பிரதேச முகாமையாளர் அறிக்கை ஒன்றின் மூலம் இபபடித் தெரிவித்திருக்கிறார்.

அடகு வைத்தோர் சங்கத்தைக் கலைப்பது பற்றி ஆலோசனை என்ற தலைப்பில் அறிகைை ஒன்று நேற்றைய உதயனில் வெளிவந்திருந்தது.

அதற்கு விளக்கம் அளிக்கும் முகமாக விடுத்த அறிக்கை ஒன்றிலேயே பிரதேச முகாமையாளர் முன்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

வட பிராந்திய முகாமையாளர் பல தடவைகள் பேராசிரியர் சிவத்தம்பி அவர்களைச் சந்தித்து, நகைகளைத் திருப்பிக் கொடுப்பதற்கு கண்காணிப்புக் குழுவின் உதவியுடன் ஆவன செய்து தருமாறு வேண்டினார்.

பேராசிரியர் சிவத்தம்பி அவர்கள் கொழும்பில் உள்ள அலுவலகத்துடன் நேரில் தொடர்பு கொண்டு மேற்படி திட்டத்துடன் வந்தார்.

இத்திட்டத்தை நாம் ஏற்றுக் கொண்டோம். அடகு வைத்தோர் சங்கத்துடன் கலந்தாலோசித்து எமது சம்மதத்தை அதே நாளில் எமது தலைமைக் காரியாலத்திற்கு அறிவித்தோம்.

நாம் அனுபபிய கடிதத்தின் சாராம்சம் அடகு வைத்தோர் சங்கத் தலைவருக்கு எம்மால் பேராசிரியர் சிவத்தம்பி அவர்கள் முன்னிலையில் அறிவிக்கபபட்டது. அதை அடகு வைத்தோர் சங்கத் தலைவரும் ஏற்றுக் கொண்டார். அக்கடிதத்தில் நகைகளை வழங்குவதற்குரிய திட்டமும் அத்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு ரிய வசதியும் ஆற்றலும் வடபிராந்திய மக்கள் வங்கித் தலைமையகத்திற்கு உண்டு என்றும் குறிப்பிட்டிருந்தோம்.

அப்படியிருந்தும் "வடபிராந்திய முகாமையாளர் தலைமையகத்தின் திட்டத்தினை நிராகரித்து விட்டார்" என்று அறிக்கையில் குறிப்பிட்டிருப்பது எமக்கு மிகவும் வேதனை அளிக்கிறது.

எமது முயற்சிகள் அனைத்தையும் சங்கத்தின் தலைவர் அறிந்திருந்தும், "வடபிராந்திய முகாமையாளர் மேற்கொண்டு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை" என்று அபாண்டமாக உண்மையைத் திரித்துக் கூறியிருப்பது எமக்கு மிகவும் வேதனையை அளிக்கிறது.

## தமிழ் பகுதி....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தியாக இருக்க வேண்டும்; பலனளிக்கக்கூடிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

இதற்கு மேலே, இந்தியா என்ன செய்ய வேண்டும் என்று சொல்ல நான் விரும்பவில்லை.

'நோய்' தொடர்ந்தால் அதற்கான சிகிச்சை முறையை மாற்றவும் நேரிடலாம்" — இப்படி திரு. அமிர்தலிங்கம் சொன்னார்.

## உங்களால் முடியும்

ஒரு பகுதியை நிர்வகிக்கக் கூடிய பொறுப்பு ஆற்றல் - திறமை உங்களிடம் இருந்தால் நீங்கள் விண்ணப்பிக்கலாம். தகைமைகள்: எதனையும் செய்து முடிப்பேன் என்ற உறுதிப்பாடும் மனோ வலிமையும் அத்துடன் தமிழ், ஆங்கில தட்டச்சு அநுபவம் ஆங்கிலத்திலும் தமிழிலும் சுயமாகவே கடிதத் தொடர்பு கொள்ளக்கூடிய ஆற்றல், ஆகக் குறைந்தது ஐந்து வருட அநுபவம் அச்சக அநுபவம் விரும்பத்தக்கது.

எழுத்து மூலம் எதிர்பார்க்கும் படியினையும் குறிப்பிட்டு சான்றிதழ்களுடன் 15 - 01 - 86ந திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

மே/பா
"உதயன்"
யாழ்ப்பாணம்.

அச்சிடுவோரும் வெளியிடுவோரும்: தஷ்ரு உமா எக்ஸ்போட்ஸ் லிமிட்டெட். 207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். அச்சகம்: 15, 2ஆம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
வெளியிட்ட திகதி 09-01-1986.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org